YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ ஐப்பசி மீ 20 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 03 (06-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 300

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

# யாழ். ஆஸ்பத்திரி:

# ஜே. ஆர், லலித்துடன்

# வைத்தியர் சங்கம் பேசும்

## தூதுக்குழு நேற்றுத் திரும்பியது

யாழ்ப்பாணம், நவம்பர்- 6

* யாழ் ஆஸ்பத்திரிப் பிரதேசம் சண்டை தவிர்ப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.
* இதனை நடைமுறைப்படுத்துவதற்கான சுயேச்சையான கண்காணிப்பு பிரிவு ஹோட்டல் அசோக்கில் இயங்கவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் பேச்சுவார்த்தைகள் நடத்தவிருக்கின்றது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு கடந்த இரண்டு தினங்களாக யாழ் நகரில், சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து, மேற்கூறப்படும் நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

மேற்கண்ட இரண்டு கோரிக்கைகளையும் யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகளும் தூதுக்குழுவிடம் வலியுறுத்தி இருந்தனர்.

நேற்று மாலை கொழும்பு திரும்பிய அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு தனது அறிக்கையை சங்கச் செயற் குழுவிடம் சமர்ப்பிக்க உள்ளது.

''பிரச்சினையை நேரிற் பார்த்துவிட்டோம். சகல தரப்பினருடனும் பேசிவிட்டோம்.

இனிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிவகைகள் பற்றி உரியவர்களுடன் பேசுவோம்.

இப்படி தூதுக்குழுவினர் யாழ் வைத்திய அதிகாரிகளிடம் கொழும்பு திரும்பு முன்னர் கூறினர்.

இதேவேளை சங்கத் தூதுக்குழுவின் யாழ் விஜயம் பற்றி ஆராய யாழ் ஆஸ்பத்திரி நடவடிக்கைக் குழு நாளை வெள்ளிக்கிழமை கூடவுள்ளது. (அ-எ-10)

## இன்றும் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ் மாநகர சபைக்குள் உள்ள தபால் நிலையங்களில் ஒய்வூதியக் கொடுப்பனவுகளைப்பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்று வியாழக்கிழமை அந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ் பிரதம தபால் நிலையம் அறிவித்துள்ளது. (எ)

## வாரியார், சிவாஜிக்கு கலாநிதிப் பட்டம்





சிதம்பரம், நவம்பர் 5

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திருமுருக கிருபானந்தவாரியாருக்கு கௌரவ கலாநிதி (டாக்டர்) பட்டம் வழங்க முடிவு செய்துள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி நடத்தப்படவுள்ள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் 80 வயதான வாரியாருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்படும்.

டாக்டர் பட்டம் பெறவுள்ள 9 பேரில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் ஒருவராவர்.

இத்தகவல்களை பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிட்டிபாபு வெளியிட்டார். (இ-எ)

## டிக்ஷிற் மீண்டும் டில்லி செல்கிறார்

கொழும்பு, நவ. 6

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஷிற் எதிர்வரும் சனிக்கிழமை புதுடில்லி செல்கிறார்.

பத்தொன்பது தினங்கள் சென்னையிலும் புதுடில்லியிலும் தங்கிவிட்டு கடந்த திங்கள்தான் திரு. டிக்ஷிற் கொழும்பு திரும்பினார்.

இதனிடையில் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட நடவடிக்கை எடுத்த பின்னரே ஒற்றையாட்சி அமைப்புக்கு அமைவான புதிய யோசனைகளைத் தனது அரசு பரிசீலனை செய்யும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியத்தூதர் டிக்ஷிற்றிடம் தெரிவித்ததாக''— இலங்கை வானொலி தனது நேற்றைய மாலைச் செய்தியறிக்கையில் தெரிவித்தது. (இ-எ)

## இன்று நடக்கும் மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ் குடாநாட்டில் உள்ள பாடசாலைகள், கல்லூரிகள் அனைத்தும் கலந்து கொள்ளும் மாபெரும் மௌனஊர்வலம் இன்று நல்லூர் கந்தசாமி கோவிலடியில் இருந்து ஆரம்பமாகிறது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் பருத்தித்துறை வீதியூடாகக் கல்வித் திணைக்களத்துக்கும், கச்சேரி நல்லூர் வீதியூடாக யாழ் செயலகத்துக்கும் செல்லும்.

இரண்டு தனித்தனி மகஜர்கள் கல்விப் பணிப்பாளரிடமும் யாழ் அரச அதிபரிடமும் மாணவ பிரதிநிதிகளினால் கையளிக்கப்படும்.

பின்னர் யாழ் செயலகத்தின் முன் கூட்டம் ஒன்றும் நடைபெறும். (இ-10)

# சப்பாத்துக்களை கையில் எடுத்து

# கன்னத்தில் மாறிமாறி அடித்தனர்

## மன்னாரில் கடற்படையிடம் பிடிபட்ட இளைஞர் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 6

எமது கைகள் உயர்த்திக் கட்டப்பட்டு கால்களும் பிணைக்கப்பட்ட நிலையில் கறுப்புத் தடியினால் சுமார் ஆயிரம் தடவைகள் தாக்கப்பட்டேன். இரண்டு சப்பாத்துக்களை கையில் எடுத்து எனது இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி அடித்தனர்.

மன்னார் கடலில் கைது செய்யப்பட்டு தள்ளாடி இராணுவ முகாமில் தாக்குதலுக்குள்ளாகி யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கும் தர்மலிங்கம் தர்மராசா (24 வயது) என்பவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் படகுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் பற்றி இவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் இரண்டு படகுகளில் இந்தியா நோக்கி 86 பேருடன் மன்னாரில் இருந்து சென்று கொண்டிருந்தோம்.

நள்ளிரவு ஒரு மணி இருக்கும். இந்தியக் கடல் பகுதியில் நாம் சென்று கொண்டிருந்த போது ஸ்ரீ லங்கா கடற்படையினர் திடீரென எமது படகுகள் மீது வெளிச்சம் அடித்தனர். இதனை அடுத்து இரண்டு படகுகளும் நிறுத்தப்பட்டன.

எமது படகுகளில் குதித்த கடற்படையினர் எம்மைத் தூக்கித் தமது கப்பலுக்குள் போட்டனர்.

இரண்டு நாட்கள் கப்பலுக்குள் எம்மை வைத்திருந்த கடற்படையினர் இறுதியில் தள்ளாடி இராணுவ முகாமில் ஒப்படைத்தனர்.

முகாமில் பெண்கள் வேறாகவும், திருமணம் முடித்தவர்கள் வேறாகவும், முடிக்காதவர்கள் வேறாகவும் பிரிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

விசாரணையின் போது தான் நான் தாக்குதலுக்கு உள்ளானேன்.

எனது முதுகு, நெஞ்சு போன்றவற்றின் மீதும் சிப்பாய்கள் தாக்குதல் நடத்தினர்.

இறுதியில் நிலத்தில் படுக்க விட்டு குதிக்காலில் அழுத்தினர்.

புல்லுப் பிடுங்குமாறும், மலசல கூடங்களைக் கழுவுமாறும் உத்தரவிட்டனர்.

செய்யாதவர்கள் மீது கயிற்றுப் பட்டியினால் முதுகில் அடித்தனர்.

இரவு வேளையில் நாம் சிரித்தால் சிப்பாய்கள் ஓடிவந்து பெரிய தடி ஒன்றை எடுத்து சிரித்தவரின் வாய்க்குள் திணிப்பார்கள்.

தாக்குதல்கள் காரணமாக நான் மயங்கி விட்டதை அடுத்து நான் இறந்துவிட்டதாக எண்ணி என்னை ஒரு அறையில் போட்டுப் பூட்டினார்கள்.

இருந்தும் முகாம் உயர் அதிகாரிகளில் ஒருவர் என்னை வந்து பார்த்து

(4-ஆம் பக்கம் பார்க்க)

### உயிர் தப்பினார்

யாழ்ப்பாணம், நவ 6

மன்னார்க் கடலில் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்ட இரண்டு சம்பவங்களில் சம்பந்தப்பட்ட அகதிகளில் ஒருவர் கடலில் குதித்து நீந்தி உயிர் தப்பிவிட்டார்.

நேற்று உதயனில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்ட கம்பர்மலை வாசியான தா. ஸ்ரீ (2 வயது) கடலில் குதித்து மரணமானார் என வெளிவந்தது தவறாகும்.

## முச்சந்தி முனி



எப்பவோ செய்திருக்க வேண்டிய வேலையை இப்பவாகுதல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நினைச்சுப் பாத்தது பெரிய காரியம்தான்...!

## 2 நாட்களாக ''டெலிபோன்'' 'அவுட்'

யாழ்ப்பாணம், நவ. 6

வெளிமாவட்டங்களுக்கும் யாழ் மாவட்டத்துக்கும் இடையேயான தொலைபேசித் தொடர்புகள் கடந்த 2 தினங்களாக துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தன.

லச்சுலையில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

பெரும்பாலும் இன்று வியாழன் தொலைபேசிச் சேவைகள் சீரடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி தொலைத் தொடர்புத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## குடாநாட்டில் நேற்று பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ். குடாநாட்டில் உள்ள கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள் அனைத்தும் நேற்று இயங்கவில்லை.

யாழ்-நகரில் உள்ள கடைகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சில கடைகள் மூடப்பட்டிருந்தன.

யாழ் மத்திய கல்லூரி மாணவன் பொ.விபுலானந்தன் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானது தொடர்பாகவே நேற்று குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வாகனங்களிலும் வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

ஒரு சில அரச ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கடமைக்குச் சென்றனர்.

தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர்களின் கோரிக்கைக்கு ஆதரவளித்து கல்வி நிறுவனங்களை மூடின. (இ-10)

## நவீன சந்தை

## மக்கள் வங்கிக் கிளையில் நேற்று அலுவல்கள் வழமைபோல் நடந்தன

யாழ்ப்பாணம், நவ, 6

செவ்வாய்க்கிழமை அதிகாலை, கோட்டை முகாம் ஷெல்லினால் சேதமடைந்த நவீன சந்தை மக்கள் வங்கிக்கிளை அலுவல்கள் நேற்று வழமை போல் நடந்தன.

கிளை அலுவலகம் உடனடியாக செவ்வாய்க்கிழமையே டிரான்ஸ் லங்கா கட்டடத்துக்கு மாற்றப்பட்டது.

குண்டுத் தாக்குதல்களினால் வங்கியிலிருந்து காகிதாதிகளே பெருமளவில் சேதமடைந்தன. வாடிக்கையாளர் கணக்குப்புத்தகங்களும் வேறு முக்கிய தஸ்தாவேஜுகளும் தீயிலிருந்து தப்பிவிட்டன.

அதனால் நேற்றே வழமையான அலுவல்களைச் செய்வதில் எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை என்று வங்கி நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வாடிக்கையாளர்கள் பலர் தமது அன்றாட வங்கி அலுவல்களைச் சிரமமின்றிச் செய்து முடித்தனர்.

மக்கள் நலன் கருதி வங்கி முகாமையாளரும் ஊழியர்களும் மேற்கொண்ட துரித முயற்சியினாலும் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்தின் உதவியினாலும் ஒரு நாளில் மாற்று ஏற்பாடு சாத்தியமானதாக வாடிக்கையாளர் ஒருவர் உதயனிடம் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை இன்னும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

06-11-1986

வியாழக்கிழமை

சுபநேரம்:
7.35 முதல் 9.05 வரை

ராகுகாலம்:
1.35 முதல் 3.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## மத்திய கல்லூரி சுற்று மதில் உயரும்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ் மத்திய கல்லூரியின் சுற்றுமதில்கள், வகுப்பறைகளின் அரைச் சுவர்கள் அனைத்தும் உயர்த்திக் கட்டப்பட உள்ளன.

அண்மையில் கோட்டையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக மாணவர் தலைவன் கொல்லப்பட்டதை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்தும் யாழ். கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்படுகின்றன.

எனவே கொங்கிறீட் பிளாட்டுக்குக்கீழ் இருக்கும்வகுப்பறைகளிலேயே இனி மாணவர்களுக்கு போதனைகள் வழங்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளுக்கு நிவாரண உதவி உண்டா?

### நாளை கொழும்பில் முடிவு

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் அகதிகளுக்கு தொடர்ந்து நிவாரண உணவுப் பொருள்கள் வழங்குவது பற்றி நாளை கொழும்பு புனர்வாழ்வு அமைச்சில் நடைபெறும் மாநாட்டில் ஆராயப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச அதிபர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்வர்.

யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள திருமலை அகதிகளில் ஒரு பகுதியினருக்கு செப்டம்பர் 15ஆம் திகதியுடன் உணவுப் பொருள்கள் வழங்குவதை அரசு நிறுத்திவிட்டது.

இன்னும் ஒரு பிரிவினருக்கு அக்டோபர் பதினைந்தாம் திகதியுடன் நிறுத்தப்பட்டுவிட்டது.

ஏனையோருக்கு அக்டோபர் இறுதியுடன் நிவாரணஉதவிகள் நிறுத்தப்பட்டுவிட்டன

இம்மூன்று பிரிவினருக்கும் தொடர்ந்து இலவச நிவாரண உதவி வழங்குவதா இல்லையா என்பது குறித்து நாளை கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் புனராலோசனை செய்யப்படும் என்று தெரியவருகிறது. (அ-எ)

## குழைஒடிக்க முயன்றவர் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 6

மரத்தில் பாய்ந்து கொண்டிருந்த மின்சாரம் குழை ஒடிக்கப் போனவரின் உயிரைக் குடித்தது

கைதடியில் திங்கட்கிழமை இச் சம்பவம் நடந்தது.

மரணமானவர் சரவணமுத்து திருஞானசம்பந்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் இருந்து ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 6

பத்துக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் செவ்வாய்க்கிழமை இரவு நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்டன.

அரியாலை, செம்மணிப் பகுதி வயல் வெளியில் இந்த ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன. (இ-10)

## எழுத்தாளர் 'சோமலெ' காலமானார்

சென்னை, நவ.5

தமிழகத்தில் பிரபல எழுத்தாளரான 'சோமலெ' இன்று புதன் கிழமைசென்னையில் காலமானார்.

அவருக்கு வயது65. இவர் தமிழில் சுமார் 60 நூல்களும் ஆங்கிலத்தில் 10 நூல்களும் எழுதியிருக்கிறார்.

தமிழக அரசு, தமிழ் வளர்ச்சிக்கழகம் ஆகியன இவருக்கு பரிசுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. (இ-எ)

## பாதிப்பு யாருக்கு

கொழும்பு, நவ,6

சுதந்திரக் கட்சியின் தேசியமயக் கொள்கைகளினால் சிங்களவர்கள் தான் பாதிக்கப்பட்டனர்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன கடந்த செவ்வாய் அரசாங்க நாடாளுமன்றக்குழுக்கூட்டத்தில பேசுகையில் சொன்னார்.

காப்புறுதிச் சேவைகள், தனியார்பஸ் சேவைகள், துறைமுகசேவைகள், பத்திரிகை நிறுவனங்கள் முதலியன 90 சதவீதம் சிங்களவர்களினால்தான் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

இப்படி ஜனாதிபதி மேலும் சொன்னார். (இ எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.6

வவுனியா பொது நூல் நிலையத்துக்கு நகரசபை செயலாளர் திரு. ஆர். இராமலிங்கம் தலைமையில் நடந்த விழாவில் திரு. பி. சிவதாசன் ஆசிரியர் விலை உயர்ந்த மணிக்கூடு நூல்நிலையப் ஒன்றை பொறுப்பாளர் திரு. மு. சண்முகநாதனிடம் அன்பளிப்புச் செய்தார். (இ)

### கடனுதவி

புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சன சமூக நிலைய ஐக்கிய நாணய நிதிச்சங்கம் முதன் முதலாக நால்வருக்கு தலா ஆயிரம் ரூபா கடனுதவி செய்துள்ளது.

இக்கடனுக்கான காசோலைகளை நிலையத் தலைவர் திரு. மு. பொ. விரபாகு வழங்கினார். (இ-118)

### பிரிவுபசாரம்

கிளிநொச்சி, நவ.6

வட்டக்கச்சி மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றி புளியம்பொக்கணை கரவெட்டித்திடல் நாகேந்திரா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர் திரு எஸ். வேலாயுதத்தை கௌரவிக்கும் முகமாக வட்டக்கச்சி மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரால் பிரிவுபசாரவிழா நடத்தப்பட்டது. (இ-76)

### குளாய்க்கிணறு

கொடிகாமம், நவ.6

யாழ் அபிவிருத்திச் சபையின் கச்சாய் உபவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் முயற்சியால் கொடிகாமம் மத்தியசந்தையில் ஒரு லட்சம் ரூபா செலவில் குழாய்க்கிணறு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(இ)

### புனரமைப்பு

வல்வெட்டித்துறை, நவ.6

வல்வெட்டித்துறை மரக்கறிச் சந்தை புனரமைக்கப்பட உள்ளது.

வல்வை நகராட்சி மன்ற செயலாளர் திரு. வீ. இராமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார். (இ-160)

# கோட்டை மீது ஆஸ்பத்திரியிலிருந்து ஷெல் தாக்குதல் நடக்கவில்லை

## ஊழியர்கள் சத்தியக் கடதாசி

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து மார்ச் மாதம் 12 ஆம் திகதி கோட்டை இராணுவ முகாம் மீது தாக்குதல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு யாழ் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் உட்படச் சகல ஊழியர்களும் சத்தியக் கடதாசி சமர்ப்பித்து உள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்திருந்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழுவிடம் இச் சத்தியக்கடதாசிகள் சமர்ப்பிக்கப்பட்டன.

''1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி நான் யாழ் ஆஸ்பத்திரியில் கடமை புரிந்தபோது அங்கு யாரும் துப்பாக்கிகளை எடுத்துச் செல்வதையோ அல்லது அவற்றை இயக்குவதையோ காணவில்லை.''

''அத்துடன் அன்று தொடக்கம் யாழ் ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக வைத்திய அதிகாரிகள் விடுதி, சிறுவர் வார்ட், உட்படப் பலபகுதிகள் சேதமடைந்தன.''

சமாதான நீதிவான் முன்னிலையில் கையெழுத்திடப்பட்ட சத்தியக் கடதாசியில் இவ்வாறு ஒவ்வொரு ஊழியரும் தெரிவித்துள்ளனர். (அ-9)

### தமிழீழ கிராம நீதிமன்றில் உள்ள பேர்ஸ்

யாழ்ப்பாணம், நவ.6

சங்கரத்தை உபதபால் அலுவலகத்திற்கு அருகாமையில் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு தொகைப் பணத்துடன் பேர்ஸ் ஒன்று கண்டு எடுக்கப்பட்டது.

இந்த பேர்ஸ் கோண்டாவில் மேற்கு தமிழீழ கிராம நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்குரியவர் உண்மையான விவரங்களுடன் தமிழீழ கிராம நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ கிராம நீதிமன்றப் பொருளாளர் திரு. க. கனகசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-10)

## மக்கள் முகம்

### எழுவைதீவு முருகவேள் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், நவ. 6

எழுவைதீவு முருகவேள் சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகா: சிவஸ்ரீ மு. சுப்பிரமணியஐயர் தலைவர்: செ.மா. பரமலிங்கம் உபதலைவர்: செல்வி செ. மல்லிகாதேவி செயலாளர்: திருமதி உ. வரதராசன் உபசெயலாளர்: செல்வி சோ. இந்திரா தேவி பொருளாளர்; சி. தனபாலசிங்கம்.

செயற்குழு உறுப்பினர்கள்: வே. கந்தசாமி, ச. சிவபாலன், நா. யசோதரன், மகேஸ்வரன். (இ-எ)


றெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) GERMAN AND HOLLAND)
- அலுமினியம் தகடுகள் (18g x 16g)
- வெள்ளைச் சீமெந்து
- காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்கும்.

Rs. 6/75-க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 34411 - 3151




அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு செவ்வாயன்று யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படம். சங்கத்தலைவர் டாக்டர் ஸ்ரான்மோர் டீ அல்விஸ, செயலாளர் டாக்டர் எஸ். ரத்னப்பிரியா, செயற்குழு உறுப்பினர் டாக்டர் எஸ். பியசிறி ஆகியோர் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன், டாக்டர் ஜெகா பசுபதி ஆகியோருடன் காணப்படுகின்றனர். (இ-9)

# ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் உண்ணாவிரதம்

## இந்திய நாடாளுமன்றத்தின் முன் ஆரம்பம்

புதுடில்லி நவ. 5

150 பேர் கலந்து கொள்ளும் ஒரு மாத கால உண்ணாவிரதப் போராட்டம் கடந்த திங்கட்கிழமை இந்திய நாடாளுமன்றத்தின் முன்னர் ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் வைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

தினமும் ஐந்து இலங்கைத் தமிழர் கலந்து கொள்ளும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் முதல் நாள் திரு. சந்திரகாசன் தலைமையிலான குழு பங்குபற்றியது.

இந்திய நாடாளுமன்றத்தின் மாரிகால கூட்டத்தொடர் ஆரம்பமான சமயம் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இந்திய நாடாளுமன்றத்தின் மாரிகாலக் கூட்டத்தொடரில், இலங்கை இனப் பிரச்சினையை எழுப்புவது என்று சகல எதிர்க் கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் மதுதண்டவதே தலைமையில் அவரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சகல எதிர்க்கட்சித் தலைவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (இ-எ)

### வானொலிச் செய்திக்கு மறுப்பு

யாழ்ப்பாணம், நப. 6

யாழ் மத்திய கல்லூரி மாணவன் பொன்னம்பலம் விபுலாநந்தன் கோட்டை இராணுவ முகாமில் இருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினாலேயே உயிரிழந்தார்.

இப்படி யாழ் மத்திய கல்லூரி அதிபர் மீண்டும் வலியுத்தி இருக்கிறார்.

இச் சம்பவம் தொடர்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட செய்தி பொய்யானது என்று கல்லூரி அதிபர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இதனையே வலியுறுத்தி உள்ளது. (இ-எ-10)

### தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ.6

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட மினி முகாம் மீது மக்கள் விடுதலைப் படையினர் 100 எம்.எம் மோட்டார், 30 கலிபர் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இதில் இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர் என்று ஈ.பி.ஆர். எல்.எப். விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கலை இலக்கியப் போட்டிகள்

கிளிநொச்சி, நவ 6

கிளிநொச்சி கலாசாரப் பேரவையினர் நடத்திய கலை இலக்கியப் போட்டிகள் கடந்த 28 ஆம் திகதி உருத்திரபுரத்திலும், 29 ஆம் திகதி முரசுமோட்டையிலும், 30-ஆம்திகதி பரந்தனிலும் வெகு விமரிசையாக நடைபெற்றன.

## விளையாட்டரங்கு

### வட்டக்கச்சியில் நடந்த போட்டிகள்

கிளிநொச்சி நப 6

தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு வட்டக்கச்சி இளைஞர் மன்றம் மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்திருந்தது.

ஆசிரியர் திரு. ஆ. ஆலாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் சுமார் 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை செல்வன் ப. ஜெயானந்தனும், இரண்டாம் இடத்தை செல்வன் கோ. கோணேஸ்வரனும், மூன்றும் இடத்தை க. சந்திரகுமாரும் பெற்றனர்.

சுமார் 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தை எஸ். விஜயேந்திரனும், இரண்டாம் இடத்தை கோ. கோணேஸ்வரனும், மூன்றும் இடத்தை அ. பஞ்சநேசநாதனும் பெற்றுக் கொண்டனர். (இ-76)

### முல்லை இளைஞர் கழகம் வெற்றி

முள்ளியவளை, நவ. 6

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றில் முல்லைத்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக 'பீ' குழுவை எதிர்த்து முல்லை இளைஞர் விளையாட்டுக்கழகம் விளையாடியது.

முல்லை இளைஞர்கழகம் 4 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது. முல்லைத்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகம் கோல்கள் எதுவும் போடவில்லை. (இ-93)

### அகதிகள் புனர்வாழ்வு கலைநிகழ்ச்சி

மானிப்பாய், நவ. 6

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கு நிதியுதவி பெற்றுக் கொடுக்கும் நோக்கமாக இம் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுவில் சுதந்திரன் விளையாட்டு கழகத்தினர் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர். (இ-90)

# தீபாவளியன்று படையினர் பிடித்த 5 அகதிகள் எங்கே?

மட்டக்களப்பு நவ. 6

வாகரை அகதி முகாமில் இருந்து ஆயுதப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட 5 திருமலைத் தமிழ் அகதிகளின் நிலை என்ன என்று விசாரித்துச் சொல்லும்படி அவர்களின் உறவினர்கள் மட்டக்களப்பு பிரசைகள் குழுவிடம் முறையிட்டிருக்கின்றனர்.

தீபாவளி தினத்தன்று இந்த அகதிகளை கதிரவெளி ஆயுத படையினர் அழைத்துச் சென்றனர். அதன் பின்னர் அவர்கள் பற்றி தகவல் எதுவும் இல்லை.

இதனிடையில் கதிரவெளியில் 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று ஆயுதப் படையினர் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட தமிழ் அகதிகள்தான் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று உறவினர்கள் சந்தேகப்பட்டே பிரசைகள் குழுவிடம் முறையிட்டனர்.

5 அகதிகளின் பெயர்களும் வருமாறு.

1 எஸ். மகேந்திரன்
2 கே. தெய்வநாயகம்
3 த. சிவஞானசுந்தரம்
4 ஆர். உருத்திரகுமார்
5 கா. சுந்தரலிங்கம்

(அ-எ-21)

### பலாலியில் குண்டுவெடிப்பு சத்தங்கள்

பலாலி, நவ. 6

செவ்வாய்க்கிழமை காலை 10 மணியில் இருந்து மாலை 6 மணிவரை பலாலி இராணுவ முகாமில் இடைக்கிடை குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

மயிலிட்டி, பலாலி தெற்குப் பக்கங்களில் இரண்டு ஷெல்கள் விழுந்து வெடித்தன

அடிக்கடிஹெலிக்கொப்டர்கள் பறந்து திரிந்ததுடன் கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்துக்குஒரு தடவையாக பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் விமானங்கள் வந்திறங்கிச் சென்றன.

விமானங்கள் மூலம் ஆயுதங்கள் கொண்டு வந்து குவிக்கப்படுவதாக அறியவருகின்றது(இ-119

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில்: சித்திபெற்ற மாணவர் விவரம்

பலாலி, நவ 6

யாழ் மாவட்டத்தில் இருந்து 5 ஆம் வகுப்பு (6 ஆம் ஆண்டு) புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விவரம் வருமாறு:

1. ஜீ கிருபாகரன், சரவணை நாகேஸ்வரி ம. வி.
2. கே. திலிப்குமார், கரவெட்டி, மாணிக்கவாசகர் வித்.
3. ஏ. அருந்ததி, வட இந்து மகளிர் வித்.
4. எம். ஆனந்தரூபன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
5. கே. சேரலாதன் திருநெல்வேலி இந்து த. க. பாடசாலை.
6. எஸ். சசிகரன், கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்.
7. எஸ். செல்வகரன், வேலணை சைவப்பிரகாச வித்.
8. எஸ். சுகந்தினி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
9. எம். சதீஸ்பாலமுருகன், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி.
10. எஸ். மயூரன், உரும்பிராய் சைவத் தமிழ் வித்.
11. எஸ். செந்தில்குமாரன், நெல்லியடி மெதசேனே மிசன் வித்.
12. ரீ. எழில்வேணி, கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி.
13. கே. பிரசாந்தி, ஏழாலை சைவசன்மார்க்க வித்.
14. ஆர். தர்மராசா, கல்வியங்காடு இந்து த. க. பா.
15. எஸ். பிரதீபன், பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.
16. பீ. ஸ்ரீநிகேதன், புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்.
17. கே. சுந்தரவடிவேல், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை.
18. பீ. சர்மிளா, மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை.
19. எஸ். பாலேந்திரன், வலந்தலை தெற்கு அ. மி. த. க. பா.
20. ஏ. யாழினி, சங்கானை சைவப்பிரகாச வித்.
21. பீ. சிவஸ்கந்தசர்மா, ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்.
22. கே. விக்னராசா, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.
23. ஏ. விஜிதா, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்.
24. ஆர். சிவகுமார், நெல்லியடி மெதசேனே மிசன் வித்.
25. எஸ். வாணி, வேலணை சரஸ்வதி வித்.
26. எஸ். ஜெகதீஸ்வரன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
27. ஏ. உமாகாந்தன், ஞானசாரியார் கல்லூரி கரவெட்டி.
28. எஸ். புஷ்பநாயகமி, பழவோடை இந்து தம்ழ்கலவன் வித்.
29. ஏ. அஜந்தினி, கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண வித்.
30. ஏ. சோபனு, காங்கேசன் நடேஸ்வரா கனிஷ்ட வித்.
31. எம். தயாபரன், [illegible]
32. என். விஜயரூபன், [illegible] ம. வி.
33. ரீ. யசோதேவி, கோப்பாய் நாவலர் இந்து த. க. பா.
34. எஸ். சாயி வசந்வராஜ், உரும்பராய் சந்திரோதய வி.
35. பீ. கதீஸ்வரன், புலோலி ம. வி.
36. ஆர். கருணாகரன், தம்பசிட்டி மெதடிஸ் வித்.
37. எம். வனிதா, மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்.
38. என். சிவதாஸ், மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்.
39. ஆர். சுகந்தினி, மகாஜன கல்லூரி தெல்லிப்பளை.
40. என். சுகிர்தம், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
41. எஸ். செந்தூர்ச்செல்வன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்.
42. எஸ். நிமிலிஸ், இந்து ஆரம்ப பாடசாலை.
43. ஏ. பாலசுமதி, உரும்பராய் சைவத் தமிழ் வித்.
44. ரீ. பத்மினி, யாழ்ரன் கல்லூரி.
45. ரீ. சுஜீவன், கோப்பாய் நாவலர் வித்.
46. எஸ். சிவதாஜினி, மானிப்பாய் விவேகானந்தா வித்.
47. எஸ். மகேஸ்வரன், நல்லூர் புனித பெனடிக்ற் றோ. க. வித்.
48. ரீ. தயாளினி, சீனன்குடா ஞானோதய வித். அளவெட்டி.
49. ரீ. நிர்மலன், புங்குடுதீவு ஸ்ரீகணேசா ம. வித்.
50. பீ. பாலகுமார், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
51. என். செல்வரஞ்சினி, கரவெட்டி சிவ ஞானோதய வித்.
52. எஸ். ஜெயசீலன், சுதுமலை சின்மயா வித்.
53. கே. ஈசன், அல்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# குருக்கள்வீட்டில் நகை, பணம் கொள்ளை

மானிப்பாய், நவ. 6

பிரசித்தி பெற்ற உடுவில் அம்மன் கோவில் குருக்கள் பிரம்மஸ்ரீ முத்துச்சாமிக் குருக்கள் வீட்டில் துப்பாக்கி முனையில் பணம், நகை முதலியவை அபகரிக்கப்பட்டன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சம்பவ தினம் குருக்கள் குடும்பத்தினர் நித்திரைக்குச் சென்ற பின்னர் இரவு 11 மணி அளவில் கதவு தட்டப்பட்டது.

குருக்கள் எழுந்து கதவைத் திறந்தார். இனந்தெரியாத மூன்று துப்பாக்கி நபர்கள், குருக்களையும் மனைவி, பிள்ளைகளையும் துப்பாக்கி முனையில் சத்தமிடாதவாறு இருத்தினர்.

அவர்களிடமிருந்த தாலிக்கொடி, காப்பு, சங்கிலி, தோடு போன்ற நகைகளைப் பெற்றுக் கொண்டனர்.

பணப்பெட்டியிலிருந்து சுமார் ஐயாயிரம் ரூபாவையும் எடுத்துக் கொண்டு வெளியேறினர்.

அம்மனின் நகையையும் குருக்களிடம் அவர்கள் கேட்டனர்.

பின்னர் எமக்கு ஏதாவது [illegible] உங்களைச் சுட்டு அழிப்போம் என [illegible] எச்சரித்து விட்டு அவர்கள் சென்றனராம். (இ-90)


பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு:

N.பாலா

திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

- தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.
- எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் &ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மனிதனின் உடம்பில் அடங்கியிருப்பது மெய்யுணர்வு அதை விளக்கிக் காட்டுவதே கல்வி எனப்படும்.

— சுவாமி விவேகானந்தர்.

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805, 22073
06-11-1986 த. பெ. இல.23

## ஆஸ்பத்திரியும் கோட்டை முகாமும்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் இப்போதைய அவல நிலை. அடிக்கடி கோட்டை முகாம் ஷெல் வந்து அங்கு விழுவதால் டாக்டர்கள், ஊழியர்கள் மரண பயத்துடன் பணிபுரிய வேண்டிய கஷ்ட நிலை இவை குறித்து இப்பத்தியில் பல தடவைகள் பிரஸ்தாபிக்கப்பட்டதை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் நன்மையைக் கருதியாவது இராணுவ முகாமை கோட்டையிலிருந்து அகற்ற வேண்டும் என அப்போதெல்லாம் 'உதயன்' வலியுறுத்தி வந்தான்.

இதே கோரிக்கையை முன் வைத்து டாக்டர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். தமது சேவைகளை மட்டுப்படுத்தி ஆட்சேபம் தெரிவித்தார்கள்.

அவர்களது அகிம்சைப் போராட்டங்கள் எதுவும் ஸ்ரீலங்கா அரசுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை; அவை குறித்து அது அக்கறைப்பட்டதாகவும் தெரியவில்லை.

யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து போராளிகள் தாக்குவதாலேயே கோட்டை முகாமில் இருந்து ஆஸ்பத்திரி மீது பதில் தாக்குதல் நடத்தப்படுவதாக ஒரே 'றெக்கோட்டை'யே அரசு திரும்பத் திரும்பப் போட்டுக் கொண்டிருக்கிறது.

யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து போராளிகள் தாக்குதல் எதையும் நடத்துவதில்லை என்று ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்த போதிலும், அரசு தனது கீறல் விழுந்த 'றெக்கோட்டையே' தொடர்ந்து இயக்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் டாக்டர்களின் தொழிற்சங்கமான, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் (ஜி. எம். ஓ. ஏ.) யாழ் ஆஸ்பத்திரி விடயத்தில் அக்கறை காட்ட முன்வந்துள்ளது.

தமது சக அங்கத்தவர்களான டாக்டர்கள் அவர்களது அடிப்படை உரிமைகளை அனுபவிக்க வகை செய்வதற்கு உதவ முன்வந்துள்ளது. டாக்டர்கள் நோயாளர்களுக்குச் சிகிச்சை செய்வது அவர்களது அடிப்படை உரிமை. ஆனல் கோட்டை முகாமிலிருந்து ஷெல் அடித்து டாக்டர்கள் சிகிச்சை செய்யும் உரிமைக்குக் குந்தகம் விளைக்கிறது படை—அரசு.

தென்னிலங்கையில் உள்ள ஏனைய தாய்த் தொழிற்சங்கங்கள் போல் அல்லாமல் ஜி. எம். ஓ. ஏ. தனது அங்கத்தவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைக் களைய மனமாரப் பாடுபடுவதைக் காண முடிகிறது.

கொழும்பில் அமைச்சர் அத்துலத்துடன் பேசிய ஜி. எம். ஓ. ஏ. தூதுக்குழு, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை வந்து நேரில் பார்வையிட்டது. அங்கத்தவர்கள் எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது சேவையை ஆற்ற வேண்டி இருக்கிறது என்பதையும் நேரில் கண்டறிந்தது. அவர்களின் குறைகளையும் கேட்டறிந்தது.

ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் எவ்வித இடையூறுமின்றி, மரண பயமின்றித் தமது கடமைகளைச் செய்யவேண்டும். அதன் மூலம் நோயாளருக்கு உரிய சிகிச்சை வசதி கிடைக்க வேண்டும். இவற்றுக்கு வாய்ப்பான, நடைமுறைச் சாத்தியமான, சூழ்நிலைக்கேற்ற திட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும். இவற்றில் ஜி. எம். ஓ. ஏ. தூதுக்குழு வெகு அக்கறை காட்டுவதையும் காணமுடிகிறது.

தூதுக்குழுவினர் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு மூலமும், அவர்களோடு உரையாடியதன் மூலமும் அவர்களது விசுவாசமான அக்கறையை உணர முடிந்தது.

ஆனல் ஒன்று. யார் எதைச் சொன்னலும், உண்மையை எப்படிப் புரியவைத்தாலும், கஷ்டங்களை விளங்க வைத்தாலும் கோட்டையிலிருந்து இராணுவ முகாமை அகற்றுவதற்கு அரசு உடன்படமாட்டாது என்பது தெளிவாகத் தெரிகிறது.

அதனல் தான் யாழ். பெரியாஸ்பத்திரிப் பகுதியை சண்டைத் தவிர்ப்புப் பிரதேசமாக்க ஜி. எம். ஓ. ஏ. முயல்கிறது என்பதும் எமக்கு விளங்காமல் இல்லை.

உத்தேச சண்டைத் தவிர்ப்புப் பிரதேசத் திட்டத்தை கோட்டை இராணுவ அதிகாரிகள் வரவேற்றதாகத் தூதுக்குழு உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் ரத்னப்பிரியா உதயனுக்குத் தெரிவித்தார். சரி, அவர்கள் வரவேற்கலாம். அமைச்சர் அத்துலத் முதல் ஜனதிபதிஜே ஆர். வரைஏற்றுக்கொள்ளலாம்.

ஆனல் சண்டை தவிர்ப்பு உரிய ஏற்பாட்டின்படி கடைப்பிடிக்கப்படுமா என்பதே கேள்விக்குரிய விடயம்.

ஆயிரம் மீட்டர் பாதுகாப்புப் பிரதேசத்தைத் தாண்டியும் ஷெல் குண்டுகள் விழுந்ததை யாழ்ப்பாணத்து மக்கள் மறந்துவிடவில்லை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இடையூறு இன்றி இயங்க வேண்டுமானல், டாக்டர்கள் ஊழியர்கள் மரண பயமின்றி கடமை புரிய வேண்டுமானல், நோயாளர்கள் மனஏக்கம் இன்றிச் சிகிச்சை பெற வேண்டுமானல் கோட்டையிலிருந்து இராணுவ முகாமை அகற்ற வேண்டியது மிக அவசியம்.

எனவே அதற்கு இடைப்பட்டதான சண்டைத் தவிர்ப்புப் பிரதேசம் போன்ற திட்டங்களோடு திருப்தி அடையாமல் முகாமை அகற்றுவதற்கு ஜி. எம். ஓ. ஏ. தொடர்ந்து பாடுபட வேண்டும். அரசாங்கத்துக்கு இடித்துரைக்க வேண்டும். அப்போது தான் தனது அங்கத்தவர்களுக்குப் பூரணமாக உதவியதாகச் சாதனை படைக்கலாம்.

# செனட் மீதான கட்டுப்பாட்டை றேகன் இழந்தார்

வாஷிங்டன், நவ.5

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமெரிக்க காங்கிரஸ் செனட் இடைக்காலதேர்தல்களில் அதிபர் றேகனின் குடியரசுக் கட்சி பலத்த தோல்வி கண்டது.

கடந்த 6 வருடங்களாக தனது கட்டுப்பாட்டில் இருந்த செனட் நிர்வாகத்தையும் குடியரசுக் கட்சி ஜனநாயக கட்சியிடம் தற்போது பறிகொடுத்துள்ளது.

ஜனநாயகக் கட்சியிடம் இருந்த செனட் நிர்வாகம் 1980ஆம் ஆண்டு றேகன் அதிபராக தெரிவு செய்யப்பட்ட தேர்தலில் குடியரசுக் கட்சியின் கைக்கு மாறியது.

அதன் பின்னர் செனட்டின் நிர்வாகத்தை ஜனநாயக் கட்சி மீண்டும் கடந்த செவ்வாய் தேர்தலில் கைப்பற்றியுள்ளது.

இத் தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்கு 52 ஆசனங்கள் கிடைத்தன. குடியரசுக் கட்சிக்கு 48 ஆசனங்கள் தான் கிடைத்தன.

பழைய செனட் சபையில் குடியரசுக் கட்சிக்கு 6 பெரும்பான்மை இருந்தது.

நாடாளுமன்றம் (காங்கிரஸ்) தொடர்ந்தும்ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது.

செவ்வாய் தேர்தலில் ஜனநாயகக் கட்சி கூடுதல் ஆசனங்களை நாடாளுமன்றத்தில் பெற்றிருப்பதாக கம்பியூட்டர் அறிவித்துள்ளது. (இ-எ)

## சீனவில் அமெரிக்க யுத்தக் கப்பல்

பீச்கிங், நவ. 5

37 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த 3 யுத்தக் கப்பல்கள் சீனவின் துறைமுகம் ஒன்றை நேற்று புதன்கிழமை சென்றடைந்தன.

அமெரிக்க - சீன உறவுகள் வளர்ச்சியில் இதை ஒரு முக்கிய அம்சமாக ராஜதந்திர வட்டாரங்கள் கணிக்கின்றன. (இ-எ)

## நொண்டி'வாத்து நிலையில் றேகன்

வாஷிங்டன், நவ. 5

தனது பதவிக் காலத்தின் எஞ்சிய இரண்டு வருடங்களை 'நொண்டி வாத்து' நிலையில் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அமெரிக்க அதிபர் றேகனுக்கு நடந்து முடிந்த காங்கிரஸ், செனட் தேர்தல்கள் ஏற்படுத்தி உள்ளன.

இப்படி அமெரிக்க அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப் படுவதாக பி.பி ஸி. அறிவித்தது.

நடந்து முடிந்த அமெரிக்க காங்கிரஸ், செனட் தேர்தல்களில் அதிபரின் குடியரசுக் கட்சி படு தோல்வி அடைந்தது மட்டும் அல்ல; தனது கட்டுப் பாட்டில் கடந்த 6 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்த செனட் நிர்வாகத்தையும் ஜனநாகக் கட்சியிடம் பறிகொடுத்துள்ளது

இதனல் அதிபர்றேகன் தனது நட்சத்திரப் போர்த்திட்டம், நேச நாடுகளுக்கு இராணுவ உதவி வழங்கும் திட்டம் ஆகியவற்றுக்குநிதி ஒதுக்கீடு செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளார் என்று பி. பி. சி. மேலும் அறிவித்தது.

அமெரிக்க அதிபரின் இத்திட்டங்களுக்கு ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள காங்கிரஸ், செனட் முட்டுக்கட்டை போட்டு வரும் என்று அச்செய்தி மேலும் தெரிவித்தது.

ஆகவே அதிபர் றேகன் தனது எஞ்சிய இரண்டு ஆண்டு பதவிக்காலத்தை 'நொண்டி வாத்து' (Lame Duck) நிலையிலேயே கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுவதாக பி.பி. ஸி. தெரிவித்தது. (இ-எ)

## சீனவில் ஆயுதக்கண்காட்சி

பீச்கிங், நவ. 5

பீக்கிங்கில் ஆயுதத் தளபாடக் கண்காட்சி ஒன்று கடந்த செவ்வாய் ஆரம்பமானது.

நவீன ரக ஆயுதங்கள் இக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பன்னிரண்டு நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் இக் கண்காட்சியை பார்வையிட்டு ஆயுதக் கொள்வனவு செய்ய பீக்கிங் வந்துள்ளனர்.

கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் யாவும் சீனவினல் உற்பத்தி செய்யப்பட்டவை.

ஆயுத உற்பத்தியில் ஈடுபடும் நாடுகளில் 6 ஆவது இடத்தை சீன வகிக்கின்றது.

ஆயுத ஏற்றுமதியினல் சீன ஆண்டுக்கு 200 கோடி டாலர் வருமானம் பெறுகின்றது.

உலகில் ஆயுத ஏற்றுமதியில் ஈடுபடும் ஏனைய நாடுகள் வருமாறு; அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி. (இ-எ)

### வெளி உலகில்

## பங்களாதேஷில் அவாமிலீக் போராட்டம் தொடர்கிறது

டாக்கா, நவ.4

இம்மாதம் 10 ஆம் திகதி கூடவுள்ள பங்களாதேஷ் நாடாளுமன்றக் கூட்டத்தில் அவாமி லீக் பங்குபற்ருது.

இப்படி அவாமி லீக் தலைவி வாஸின வாஜெட் அறிவித்திருக்கின்ருர்.

புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் ஜனதிபதி எர்ஷாட் சமர்ப்பிக்க உள்ள பிரேரணையை எட்டுக் கட்சிகள் கொண்ட எதிர்க் கட்சிக் கூட்டணி முழுமூச்சாக எதிர்க்கும் என்றும் திருமதி வாஸின வாஜெட் தெரிவித்தார். (இ-எ)

# மாமரமாய் நின்றவனின் மாயையைவென்றவன்

சூரபன்மன் சிவபெருமானை வேண்டிப் பதினுயிரம் ஆண்டுகள் கடுமையான தவமிருந்தான். அவனுடைய தம்பியர் இருவராகிய சிங்கமுகாசுரனும், தாரகாசுரனும், தமையனுடன் கூடவே



கடுந்தவம் புரிந்தனர். சூரபன்மனுடைய தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவன் முன் தோன்றி 'சூரபன்ம நீ விரும்பியபடி இப் பிருதிவியிலுள்ள ஆயிரங் கோடி அண்டங்களில், ஆயிரத்தெட்டு அண்டங்களை, நூற்றெட்டு யுகங்கள் ஆளக்கடவாய். ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நொடிப்பொழுதில் வலம் வரக்கூடிய சக்தி கொண்ட 'இந்திர ஞாலம்' என்னும் தேரையும், யாவரையும் வெல்லும் வலிமையையும், வீரத்தையும், ஆற்றலையும், அழியாத வச்சிர யாக்கையையும், குறைவில்லாத செல்வங்களையும் தந்தோம்' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

வீரமகேந்திரபுரி என்னும் பட்டினத்தைத் தலைநகராயமைத்து ஆட்சி பீடத்தில் ஏறிய சூரபன்மனின் அதிகார வெறி தலைக்கேறியது. ஆணவ முனைப்பாலும், செல்வச் செருக்காலும், சூரபன்மன், தேவர்கள் அனைவரையும் ஏவல் கொண்டான். அரிபிரமேந்திராதி தேவர்களும், அவன் இட்ட கட்டளைகளுக்குத் தலைவணங்கி நடந்து வந்தனர். சிறந்த வலிய வரங்களைக் கொடுத்தருளிய சிவபிரானின் எண்ணம் அவனுடைய சிந்தனையினின்றும் மறைந்து விட்டது.

சூரபன்மனின் கொடிய ஆட்சிக்கு ஆற்ருத, அரி பிரமேந்திராதி தேவர்கள் சிவபிரானிடம் சென்று ''ஐயனே இனியும் நாம் சூரபன்மனின் துன்புறுத்தலைத் தாங்க வல்லோம் அல்லோம். ஆசையால் தேவரீர் தான் காத்து ரட்சித்தருள வேண்டும்'' என்று வணங்கி நின்ருர்கள். அவர்களின் விண்ணப்பத்தைச் செவிமடுத்த சிவபெருமான் ''தேவர்காள், உங்கள் துன்பங்களைத் துடைக்கவும், சூராதி அவுணர்களை அழிக்கவும், அழகும், இளமையும், வீரமுங் கொண்ட ஒரு புதல்வனைத் தருவோம் அஞ்சாது செல்வீர்கள்'' எனக் கூறி விடை கொடுத்து யோக நிட்டையில் இருந்தார். தேவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்ருர்கள்.

மன்மதனின் பாணத்தினல் நிட்டை கலைந்து கோபத்துடன் விழித்த சிவபிரானின் நெற்றிக் கண்ணினின்றும் வெளிப்பட்ட ஆறு அக்கினிப் பொறிகள், சரவணப் பொய்கையில், ஆறு திருமுகங்களும், பன்னிருகைகளும் கொண்ட முருகக் கடவுளாக அவதாரஞ் செய்தன. தேவர்களின் துன்பத்தைத் தீர்க்கத் திருவுளங் கொண்ட சிவபிரான், கந்தவேளை நோக்கி ''புதல்வ சூராதி [illegible] பேந்திராதி தேவர்கள் [illegible] துயருற்று வருந்துகின்றனர். சூரபன்மனையும், அவன் கிளையையும் அழித்துத் தேவர்களின் இன்னல்களைத் தீர்க்குதி' எனப் பணித்து சர்வ வல்லமையும், ஒளியும் பொருந்திய 'சக்திவேல்' ஒன்றையும் கொடுத்தருளினர்.

ஆறுமுகப் பெருமான் ஏவிய வேற்படை, ஆயிர கோடி சூரியர்கள்போல ஒளியைப் பரப்பித் தீப்பிளம்மை உமிழ்ந்து சென்று சூரபன்மனின் இருள்வடிவத்தை அழித்தது.

தனது மாயைகள் அனைத்தையும் அழித்து விட்டு வேற்படை எதிரே வருவதைக் கண்ட சூரபன்மன் ''இப்பாலகன் ஏவிய வேற்படை என்னை என்ன செய்யும்'' என ஏளனமாகச் சிரித்து, சமுத்திரத்தின் நடுவே சென்று அக்கினிபோன்ற தளிர்களையும், புகை போன்ற இலைகளையும், மரகதம் போன்ற காய்களையும், மாணிக்கமணி போன்ற பழங்களையும், முகில் போன்ற கிளைகளையுமுடைய தொரு மாமரமாக நின்று கிளைகளை அசைத்துப் பயங்கரமாக ஆரவாரஞ் செய்தான்.

வேற்படை சீற்றத்துடனும், ஒளியுடனும் மிக வேகமாகத் துரத்திச் சென்று, ஆணவத்துடன் நின்ற சூரனகிய மாமரத்தை இரு கூறுகத் துணித்தது.

சூரபன்மனின் வச்சிர யாக்கையின் ஒரு பாதி மயிலாகவும், மற்றொரு பாதி சேவலாகவும் மாறின. மயிலாக மாறிய பாதி ''நான்'' என்கின்ற அகங்காரம், சேவலாக மாறிய பாதி 'எனது' என்கிற மமகாரம்.

இவ்விரு பாதிகளும் மீண்டும் வலிமையுடன் போர்புரிய வந்ததைக் கண்ணுற்ற கந்தக் கடவுள், சூரபன்மனை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டு, அருள் ஒளி பொழிகின்ற திருக்கண் ணேக்கம் செய்ய, அவை பகைமை நீங்கித்தெளிந்த [illegible] சரணடைந்தன. முருக வேளும் சேவலைத் தனது கொடியாகவும் மயிலை வாகனமாகவும் ஏற்றுத் திருவருள் புரிந்தார்.

சூர்மார்புங் குன்றும் தொளைத்த நெடுவேல், அனல்வடிவும், வெப்பமும் மாற்றத் தேவகங்கையில் மூழ்கிப் புனிதம் பெற்று மீண்டும் செவ்வேளின் செங்கரத்தில் அமர்ந்தது. ✶

அழகு அருணசலம்

### கந்தஷஷ்டி ஐந்தாம் நாள் இன்று

### சமய சந்திகளில்

## சமய தீட்சை

சாவகச்சேரி, நவ. 6

சரசாலை வடக்கு இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் 31 ஆம்திகதி ஐப்பசி வெள்ளிக்கிழமையன்று சமய தீட்சை பெறும் வைபவம் இடம் பெற்றது

பிரதமகுரு வேதாகம சோதிட பூஷணம் சிவாசாரிய திலகம் சிவஸ்ரீ.சி. சிதம்பரநாதக் குருக்கள் 25 பேருக்கு சமய தீட்சைக்கிரியைகளை நடத்தி வைத்தார். (இ-31)



### பொய்யாமொழி

குறள்:

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை
எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

பொருள்:

யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள், வாய்மையைவிட எத்தன்மையாலும் சிறந்தவைகளாகச் சொல்லத் தக்கவை வேறு இல்லை.

# அகிலமும் இறைவனுள் அடக்கம் இறைவன் தொண்டருள் அடக்கம்

## கந்தசஷ்டி விழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ. 9

அகிலமும் இறைவனுள் அடக்கம். இறைவன் தொண்டருள் அடக்கம். அதனல் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

இப்படி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் நல்லை ஆதீனத்தில் கந்தசஷ்டி விழாவின் மூன்ரும் நாள் நிகழ்ச்சியில் 'கூறுமடியார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே' என்ற தலைப்பில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

''நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத என்னடியான் உயிரை வவ்வவேலென்று அடற் கூற்றுரைத்தவன் பெருமான்''

இறைவன் பெருமையைச் சொல்லும் புராணத்தைவிட அடியார் பெருமையைக் கூறும் திருத்தொண்டர் புராணமே ''பெரிய புராணம்'' என்று சிறப்பிக்கப்படுகின்றது.

முப்போதும் திருமேனி தீண்டுபவர்களான 'தில்லைவாழ்அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்ற அடியை முதன்மையாகக்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவனடியார் திறம்கூறும் திருத்தொண்டத் தொகை என்ற நூலைப் பாடினர்.

அதேபோல் முருகன் அடியார் பெருமையின் திறங் கூறும் 'சேய்த் தொண்டர் புராணம்' என்னும் நூலை வரகவி தேனுர் சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் இயற்றித் தந்திருக்கிருர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் இருந்த 41 முருகன் அடியார்களைப் பற்றிய குறிப்பு இதில் காணப்படுகின்றது தில்லைவாழ் அந்தணர்களைப் போல செந்தில் அந்தணர்கள் (திரிசுந்தரர்) இதில் போற்றப்படுகின்றனர்.

கலியுகத் தெய்வமாகிய கந்தன் நாமமே கூறி முக்திப் பேற்றைப் பெற்ற செந்தில்வாழ் அந்தணர்கள், அகத்தியர் ஔவையார், நக்கீரன், நல்லியக் கோடன், கச்சியப்பர், அருணகிரியார், குமரகுருபரர் போன்ற அடியார்களின் வரலாறு பக்தியின் சிறப்பை நமக்கு உணர்த்தி நிற்க வல்லது.

இப்படி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் சொன்னர். (இ-எ)

# உலக அபிப்பிராயத்தை புறக்கணிக்க முடியாது

## என்கிருர் அத்துலத்முதலி

கொழும்பு, நவ 6

உலக அபிப்பிராயத்தைநாம் புறக்கணிக்க முடியாது. உலக அபிப்பிராயத்தை நாம்மதித்து நடந்தால் புதிய நண்பர்களை பெற முடியும்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு சொன்னர்.

களனியில் நடந்த கூட்டம் ஒன்றில் அமைச்சர் பேசினர்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

அரசியல் தீர்வை விட்டால் பிரச்சினைக்குவேறு வழி மூலம் தீர்வு காண அரசினல் முடியும்.

அப்படி அரசாங்கம் ஒரு தீர்வு எடுப்பின், உறுதியுடன், பின் வாங்காது நிறை வேற்றியே தீரும்.

இலங்கைஅரசின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வது இலகுவான காரியம் அல்ல.

பெரும்பான்மை இன மக்களின் ஆதரவு இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

எமது யோசனைகளுக்கு பெரும்பான்மை மக்களின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னர். (இ-எ)

## லிஸ்பனில் இலங்கையர் சுட்டுக் கொலை

கொழும்பு, நவ. 6

லண்டனில் வாழும் இலங்கையர் ஒருவர் ஸ்பானிய தலைநகரான லிஸ்பனில் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போதைவஸ்து கடத்தும் நபர் என்று தவறுதலாக அடையாளங் காணப்பட்டே அவர் சுடப்பட்டார் என்று லண்டனுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோ ராஜா என்ற இந்த இலங்கையர், லண்டனில் பிரிட்டன் போக்குவரத்துச் சங்கத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்.

வியாபார விஷயமாக ஸ்பெயினுக்குச் சென்ற சமயத்தில்தான் இவர் சுடப்பட்டார். (-எ)

## இந்திராவிருது

புதுடில்லி, நவ. 5

சுவாமி ரங்கநாதானந்தஜிக்கு தேசிய ஒற்றுமைக்கான 'இந்திராகாந்தி விருது' வழங்கப்பட்டது.

ஒரு லட்சம் ரூபா ரொக்கத்தின் பாராட்டுப் பத்திரமும் விருதாக வழங்கப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெ தேண் இன்ஸ்ரிரியூட்
A/L 87
விஞ்ஞானம்
கிழமையில் 2 மீட்டல் வகுப்புகள்
ஒரு விஞவிடை வகுப்பு நடைபெறும்.
ஆரம்பம்: 10-11-86

# உதயன்

06 - 11 - 1986 வியாழக்கிழமை

நொதேண் இன்ஸ்ரிரியூட்
சுண்டுக்குளி.
A/L 87
கலை, வர்த்தகம், மீட்டல் வகுப்புகள்
DAY CLASSES ஆரம்பம்: 10-11-86
(கடந்த பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பல மாணவர்கள் பெற்றுள்ளனர்)

## ஈழ தேச விடுதலையில் மாணவரின் உரிமை

### வலியுறுத்தி துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், நவ 6 ஈழ தேச விடுதலையில் மாணவரின் உரிமை என்ற தலைப்பில் ஈழமாணவர் பொது மன்றம், புதிய ஜனநாயக மாணவர் சங்கம், தேசிய மாணவர் மன்றம் ஆகியவை இணைந்து ஐக்கிய முன்னணியின் செயற்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையின் சாரம் வருமாறு:-

நமது தேசத்து மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் எதிரியின் காலடிப் பதிவுகள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்க, கிழக்கிலே மக்கள் உயிருக்காக ஓடிக்கொண்டிருக்கையில் நமது தேசத்தின் எல்லைக்குள்ளேயே இன்னும் ஓர் நிகழ்வு: பலர் கைதுசெய்யப்படுகின்றனர். பலர் சித்திரவதை செய்யப்படுகின்றனர், இன்னும் சிலர் கொல்லப்படுகின்றனர்.

இவர்கள் எல்லாம் யார்? நமது மண்ணை நேசித்து, மக்களை நேசித்து போராடவெனப் புறப்பட்டவர்கள் மரணத்தின் நிழல்கள் போராளிகளைப் பின் தொடர்கின்றன.

ஆம்; விடுதலை இயக்கங்களுக்கு அச்சுறுத்தல், தடைவிதிப்பு, மாணவர் அமைப்புகள் இருந்த இடம் தெரியாமல் தொலைக்கப்படுகின்றன.

பல வருடங்களாக மாணவர்கள் நன்கு அறிந்தும், அபிமானம் வைத்தும் இருந்த அமைப்புக்களில் ஒன்றுகிய தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) தடைசெய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் விடுதலையை நேசித்த ரெசோ தோழர்கள் மரணபயத்துடன் வாழ்கின்றனர்.

ஆயுதமுனையில் ராணுவரீதியில் அச்சுறுத்தப்பட்டு, அவசர நேரத்தில் மக்களுக்குச் சேவை செய்த அவர்களின் அம்புலன்ஸ் வண்டியும் பறித்தெடுக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசுக்கு எந்தவித குறைவுமில்லாமல் சுளிபுரத்தில் வைத்து இனந்தெரியாதவர்களின் காரில் இருந்து ரெசோ தோழர்களுக்கு அசிட் வீசப்பட்டுள்ளது. நாம் என்ன உகண்டாவில் இடிஅமீனின் ஆட்சியிலா வாழ்கிறோம்? அல்லது இன்னெரு சிறீலங்காவையா உருவாக்குகின்ரும்.

ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் அதிகமாக வைத்திருக்கும் பயிற்சிபெற்ற நபர்கள் ஏனைய சித்தாந்தங்களை வைத்து வேலைசெய்பவர்களை தடைசெய்வது எவ்வாறு சரியாகும்?

அப்படியானல் தன்னுடைய இனவாத சித்தாந்தத்தை வைத்து ஆயுதமுனையில் எம்மை அடக்கும் சிறீலங்கா அரசையும் சரியென்று சொல்லப்போகின்ரோமா? இதுதானு தமிழீழ நிர்மாணம்? இதுதானு எங்களின் தாயக தாகம்?

இப்படி அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (இ)

## வெள்ளம் தேங்க விடாதீர்கள்!

### யாழ் மாநகர ஆணையாளர் பொதுமக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 6 மழை காலம் ஆரம்பமாகியுள்ளதால் நகரின் வீதிகள், ஒழுங்கைகள், சிறிய ஒழுங்கைகள் அனைத்திலும் வெள்ளம் தேங்கி நிற்க விடவேண்டாம்.

பொது மக்கள் அனைவரையும் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை விவரம் வருமாறு:-

வீதிகளில் வெள்ளம் தேங்குவதால் பொதுமக்களது சுகாதாரம் பாதிப்படையவும், வீதிகளில் குழிகள் ஏற்படவும் நேரிடுகிறது. இதனல் பாதசாரிகள் மற்றும் வாகனப் போக்குவரத்துச் செய்வோருக்கு இடைஞ்சல் விளைவிக்கக்கூடியதாய் இருக்கிறது.



குடியிருப்பாளர் சிலர் தம் சொந்த வீட்டிலேயே குடியிருக்கமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதுடன் வேறு பல இடைஞ்சல்களும் ஏற்படுகின்றன.

எனவே சுற்சுவர் மதில் அமைத்தோர் தமது சுற்றுடலிலுள்ள இயற்கையான நீரோட்ட வழிகளைத் தடை செய்யாது வெள்ளம் இலகுவாக வழிந்தோடுவதற்கு வசதியாக நிர்ணயிக்கப்பட்ட நீரோட்ட இடைவெளிகளைத் திறந்துவிட வேண்டும்.

நீரோட்ட இடைவெளிகளை அமைக்காதவர்கள் அவற்றை அமைக்குமாறு வேண்டுவதுடன் இயற்கையானதும் இயல்பானதுமான வெள்ளோட்ட வழிகளைத் தடை செய்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் மாநகரசபையால் நீரோட்டத்திற்கு ஏற்றவாறு நிர்மாணிக்கப்பட்டும், புனரமைக்கப்பட்டும் திருத்தம் செய்யப்பட்டும் உள்ள வடிகால்களில் வாழைமரம், செடிகொடிகள் மற்றும் குப்பைகளைப் போடாது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ.10)

### கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 9 யாழ் மத்திய கல்லூரியின் எதிர்காலம் பற்றி ஆராயக் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் அவசரப் பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. (எ)

## விகிதாசார பிரதிநிதித்துவம்:

### அறிக்கை சமர்ப்பிக்க ஸ்ரீ.ல.சு.க. விசேஷ குழு

கொழும்பு, நவ.6 விகிதாசார பிரதிநிதித்துவ முறையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி விசேட குழு ஒன்றை நியமித்திருக்கின்றது.

அடுத்த பொதுத்தேர்தல் விகிதாசார அடிப்படையில் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் கிடைக்கும் வாக்குகளின் அடிப்படையில்தான் அக்கட்சிகள் சார்பி தெரிவாக எம்.பி.க்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும்.


இந்த விகிதாசார முறையை நீக்கவேண்டும் என்ற அபிப்பிராயம் சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் நிலவுகிறது. அதைத் தொடர்ந்தே இதுபற்றி ஆராயவிசேட குழு ஒன்றை கட்சித்தலைமைப்பீடம் நியமித்துள்ளது. (இ-ஐ-எ)

### நுவரெலியா விதை கிழங்கு

யாழ்ப்பாணம், நவ. 6 விதை உருளைக்கிழங்கு ஏற்றிக்கொண்டு வர இரண்டு லொறிகள் இம்மாதம் 8 ஆம் திகதி யாழ் நகரில் இருந்து நுவரெலியா செல்லும்.

நல்ல தரமான உருளைக்கிழங்குகளை தெரிவு செய்வதற்காக யாழ் விவசாயப் பண்ணை ஆராய்ச்சி அதிகாரி திரு. இரகுபதி நேற்று நுவரெலியாவுக்கு புறப்பட்டுச் சென்ருர்.

அச்சுவேலி கூட்டுறவுச் சங்கம், நீர்வேலிக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் லொறிகளே இம்மாதம் 8 ஆம் திகதி செல்லவுள்ளன. (இ-எ)



யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க நினைவுக் கூட்டத்தில் தென்னிலங்கையிலிருந்துவந்து கலந்து கொண்ட வண.பிதா போல் கஸ்பேர்ஸ் (வலது) வண பிதாயோகான் தேவானந்தா (இடது) ஆகியோருடன் தலைமை வகித்த வண பிதா ஜெயசீலனும் படத்தில் காணப்படுகிருர்.

## 5 ஆம் வகுப்பு.

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

வாய் திக்கம்சிட்டி விஞயகர் வித்.

54. ரீ. வதனு, புலோலி எம். எம். பாடசாலை.

55. என். மகாலக்ஷ்மி, நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்.

56 கே. மஞ்சுளா, நெல்லியடி மெதசேனை வித்.

57. ஏ, யாழினி, வேலணை சைவப்பிரகாச வித்.

58. எஸ். மதியழகன், ஏழாலை சைவசன்மார்க்க வித்

59. எஸ். செல்வரஜனி, கரணவாய் தாமோதர வித்.

60. எம் சுமதி, மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்.

61. எஸ். முருகதாஸ், ஏழாலை எஸ் ரீ. எஸ். ரோ க. வித்.

62. ஆர். பிரேமிளா, கல்வியங்காடு த. க. பா,

63. என். பாமா, தெல்லிப்பளை, தந்தை செல்வா தொடக்கப் பள்ளி. (இ-119)

## வடக்கு கிழக்கில் நடப்பது இனமோதல் அல்ல

### வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் தீர்மானம்

கொழும்பு, நவ.6 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்று வரும் மோதல் இனரீதியானது அல்ல. இந்த இரு மாகாணங்களிலும் தமிழ் பேசும் மக்களின் சுயாதீனமான ஆட்சி ஒன்றினை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட அரசியல் இயக்கத்தை நசுக்க அரசாங்கத்திஞல் அனுப்பப்பட்ட ஆயுதப்படையினருக்கும், அந்த இலட்சியத்தை வென்று எடுக்க ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோருக்கும் இடையிலான ஒரு மோதலே.

இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் 19 ஆவது பேராளர் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் மேலும் கூறுவதாவது;-

1947 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் மாறி மாறிப்பதவிக்குவந்த அரசாங்கங்கள் தமிழ்பேசும் மக்கள் தொடர்பாக கடைப்பிடித்து வந்த பாரபட்சமான கொள்கைகள்

1958 இல் இருந்து தமிழ் பேசும் மக்கள் மீது காலத்துக்கு காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள்

தமிழ்பேசும் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவந்த ஆயுதப்படையினரின் அடக்குமுறைகள். பயங்கரவாத நடவடிக்கைகள் ஆகியவற்றின் விளைவாகவே தமிழ் ஈழம் என்ற பெயரில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வேருனதோர் அரசை நிறுவுவதற்கான கோரிக்கையும் அதனை வென்றெடுப்பதற்கான ஆயுதப் போராட்டமும் எழுந்தன.

பாரம்பரிய பிரதேசத்தில் சொந்த ஆட்சி ஒன்றை நிறுவக்கோரும் ஜனநாயக உரிமை தமிழ் பேசும் மக்களுக்குஉண்டு சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய பூமி ஆகியவற்றை அங்கீகரிப்பதன் மூலம் அரசியல் தீர்வு ஒன்றை பேச்சுக்கள் மூலம் காணவேண்டும். அதன்மூலம் மோதலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

அதிகரித்து வரும் பொருளாதாரச் சுமைகளைச் சுமத்துவதற்கு இனமோதலைச் சாட்டாக உபயோகிக்கின்ற வடக்கு, கிழக்கில் யுத்தக் கொள்கையை முன் எடுத்துச்செல்லும் அரசாங்க முயற்சிக்கு தொழிலாளர் வர்க்கம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றது.

தமிழ்பேசும் மக்கள் ஏற்கக்கூடிய ஜனநாயகத் தீர்வு ஒன்றைக் காண வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து ஆயுதப்படையினர் வாபஸ் வாங்கப்பட வேண்டும்—

இப்படி அத்தீர்மானம் கோரியுள்ளது.

இத்தீர்மானத்துக்கு மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் 69 சதவீதமானேர் வாக்களித்தனர். 18 சதவீதமானேர் எதிர்த்தனர். 13 சதவீதமானேர் நடுநிலைமை வகித்தனர். (இ-எ)

### ஈ.பி.ஆர்.எல் எவ். மரணதண்டனை வழங்கியது

யாழ்ப்பாணம், நவ. 6 போராளிகளின் நடவடிக்கைகள்பற்றி ராணுவத்துக்கு தகவல் கொடுத்ததற்காக மாங்குளத்தைச் சேர்ந்த மருதை இராசலிங்கம் (லிங்கம்) (39 வயது) என்பவருக்கு மக்கள் விடுதலைப் படை இம்மாதம் நான்காம் திகதி மரணதண்டனை வழங்கியது.

சுறுப்புச்சட்டைக்காரர்களுக்கு 60 வாள் செய்து கொடுத்ததாகவும், ஒலுமடுவைச் சேர்ந்த இருவரை ராணுவத்திற்கு காட்டிக் கொடுத்ததாகவும் இவர் மீது மேலும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அத்துடன் மாங்குளம் அதிரடிப் பொலீஸில் துப்பாக்கி வாங்கி பொதுமக்களின் கால்நடைகளைக் கொன்று ராணுவத்திற்கு விருந்தும் படைத்தாராம்.

மேற்கண்ட தகவல்கள் ஈ. பி ஆர் எல்.எவ். அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## யாழ் மத்திய கல்லூரியின் அவசரப் பொதுக் கூட்டம்

இன்றைய சூழ்நிலையில் பாடசாலையின் எதிர்காலம்பற்றி ஆலோசிப்பதற்கு யாழ் மத்திய கல்லூரியின் சகல பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் 8-11-86 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு தவருது சமுகம் தந்து ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம்.

வே.பாலசுந்தரம் அதிபர் — எஸ். தவலிங்கம் செயலாளர், பா. அ. ச.

இன்னிசை வேந்தர்
பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
வழங்கும்
மூன்று புதிய ஒலி நாடாக்கள் வெளியீட்டு விழா
★ நல்லூரான் காவடிச் சிந்து
(கவிஞர் சோ. பத்மநாதன் யாத்தவை)
★ கந்தர் சஷ்டி கவசம்
(சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பேருரையுடன் கூடியது)
★ நித்திய பாராயணப் பாமாலை
(பஞ்சபுராணம், சிவபுராணம் அடங்கியது)
இடம்: நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 7-11-86 ஐப்பசி வெள்ளி காலை 9.30 மணி
தலைவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
அருளுரை: ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள்
அறிமுகவுரை- இ. ஜெயராஜ் அவர்கள் (கம்பன் கழகம்)
ஆய்வுரை: அறிஞர் க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள்
சிறப்புரை: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
அடியவர் அனைவரும் வருகவே!
விழா அமைப்பு: ரெலிகுளோப்

### மத்திய---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படும்.

இவ்வாருனவகுப்பறைகளின் சுற்றுச் சுவர்கள் உயர்த்தப்பட்டு மின்சார வெளிச்சங்கள் போடப்பட்டு வழமை போல் பாடங்கள் நடைபெறவும் ஒழுங்குகள் செய்யப்பட இருக்கின்றன.

எந்தவித காரணத்தை முன்னிட்டும் யாழ். மத்திய கல்லூரியை இடம் மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (இ-10)

### மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவார காலத்தில் இப்போதிருக்கும் இடத்துக்குக் கிட்டிய இன்னெரு பகுதியில், மக்கள் வங்கி அலுவலகத்தை நிரந்தரமாக அமைப்பதற்கான [illegible] வருவதாக அறியப்படுகிறது.

### குழை ---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தன். (வயது 48)

இறந்தவரின் மரண விசாரணையை யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு.க.கேசவன் நடத்திஞர். (இ-10)

### சபாபாத்து---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தண்ணீர் தெளித்து எழுப்பி விசாரணைக்கு உட்படுத்திஞர்.

இரண்டு படகுகளில் ஒரு படகில் இருந்த மூவர் கடற்படையினரின் வெளிச்சத்தைக் கண்டு கடலினுள் குதித்தனர்.

அவர்களின் சடலங்கள் மன்னர் கரையை வந்தடைந்ததாக பின்னர் அறிந்தேன்.

இவ்வாறு அவர் சொன்னர்.

இராணுவத்தினரின் கடுமையான தாக்குதல் காரணமாக இவருக்கு பல காயங்கள் ஏற்பட்டுள்ளன. (இ - 10)

## தர்மகர்த்தா கொலை

### பொலீஸார் 2 பேரை தேடுகிருர்கள்

கொழும்பு, நவ. 6 கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோயில் தர்மகர்த்தா எஸ். சி. தியாகராசாவைக் கொலை செய்தது தொடர்பாக இரண்டு நபர்களை பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

அவர்கள் யார் என்று அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் எந்த நேரமும் அவர்கள் கைது செய்யப் படலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த தர்மகர்த்தாவின் குடும்பத்தினர் தென் இந்தியாவில் உள்ளனர். அவரின் ஒரே மகளான திருமதி திரிபுரிகுமாரி (28) கொழும்பு நிறுவனம் ஒன்றில் கணக்காளராகப் பணிபுரிகின்ருர். (அ-எ)

### சிவானந்தர் நூருவது பிறந்ததினம்

யாழ்ப்பாணம், நவ. 6 சுவாமி சிவானந்தரின் நூருவது பிறந்த தினத்தையொட்டி எதிர்வரும் சனிக்கிழமை திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் விழா கொண்டாடப்படுகிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக ஆத்மஜோதி நா. முத்தையாவின் சிறப்புரையும், திருமதி. சுதாசினி குணராஜாவின் கதாப்பிரசங்கமும் இடம் பெறும்.

நிகழ்ச்சிகள் யாவும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும். (இ-10)

### கந்த ஷஷ்டி விரதம் அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 6 சந்நிதி முருகன் கோயிலில் கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டித்து வந்தவர்களுக்கு இம்முறை அச்சுவேலி காட்டுநில கந்தசுவாமி தேவஸ்தானத்தில் விரதம் அனுஷ்டிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

2 ஆம் திகதி ஆரம்பமான கந்தஷஷ்டி உற்சவம் 7-ஆம் திகதி சூரசங்காரத்துடனும் 8 ஆம் திகதி திருக்கல்யாணத்துடனும் முடிவடையும் என தேவஸ்தானம் விரதிகளுக்கு அறிவித்துள்ளது. (இ-10)

### தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிளின் (CD 200) பற்றி கவர் மூடி நல்லூரில் இருந்து உடுவில் போகும் வழியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் விலாசத்துக்கு கொண்டு வந்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நிப்பொன் ரெலிரவல்ஸ், 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### நீத்தார் பட்டியல்

#### திருமதி தங்கம்மா சோமசுந்தரம்

சுருவிலைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சோமசுந்தரம் காலமாகிவிட்டார். இவர் சுருவில் ரோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் திரு. சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், விமலேஸ்வரன் (லண்டன்) மணிவண்ணன் (கனடா), ரதி (லண்டன்), திருமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், மன்மதராஜா (பொறியியலாளர் லண்டன்) அவர்களின் அன்பு மாமியும், லவன் (லண்டன்) அவர்களின் அன்புப்பேத்தியும், காலஞ்சென்ற திருமதி கெசவள்ளியம்மா வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி மனேன்மணி செல்லப்பா, காலஞ்சென்ற தில்லையம்பலம், திருமதி யோகம்மா நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம், திருமதி சிவக்கொழுந்து தம்பிப்பிள்ளை, முருகேசு, சுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (6-11-86) மாலை 3 மணியளவில் சுருவில் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுருவில், ஊர்காவற்றுறை. — பொ. சோமசுந்தரம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 06 – 11 – 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 No 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org